Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

सत्यमेव जयते

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L' État de Poudouchéry

# The Gazette of Puducherry

அதிகாரம் பெற்ற வெளியீடு    Publiée par Autorité    Published by Authority



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண் | | புதுச்சேரி | செவ்வாய்க்கிழமை | 2025 ௵ | ஏப்ரல் ௴ | 1 ௳ |
| No. | 13 | Poudouchéry | Mardi | 1 | Avril | 2025 (11 Chaitra 1947) |
| No. | | Puducherry | Tuesday | 1st | April | 2025 |



*பொருளடக்கம்*    *SOMMAIRES*    *CONTENTS*



| | பக்கம் | | Page | | Page |
|---|---|---|---|---|---|
| ஒருசில நிலப்பகுதிகளை கையகப்படுத்துதல் | .. 172 | Acquisition de certain terrains | .. 172 | Acquisition of certain lands | .. 172 |
| அரசு அறிவிக்கைகள் | .. 176 | Notifications du Gouvernement | .. 176 | Government Notifications | .. 176 |
| ஒப்ப அறிவிப்புகள் | .. 178 | Avis d' appel d' offres | .. 178 | Tender Notices | .. 178 |
| சாற்றறிக்கைகள் | .. 178 | Annonces | .. 178 | Announcements | .. 178 |

புதுச்சேரி அரசு

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, புதுச்சேரி

No. 604/வரு/பி1/2025.

### அறிவிக்கை

**நிலம் கையகப்படுத்துதல் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டம், 2013 பிரிவு 4(2)-ன் படி-**

''புதுச்சேரி, கதிர்காமம் தில்லையாடி வள்ளியம்மை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்'' என்ற பொது நோக்கத்திற்காக, புதுச்சேரி மாவட்டம், உழவர்கரை தாலுக்கா, உழவர்கரை வருவாய் கிராமத்தில் நிலம் தேவைப்படுகிறது;

2. மேற்கூறிய பொது நோக்கத்திற்காக, புதுச்சேரி அரசின், பள்ளிக்கல்வி இயக்குனரகம், புதுச்சேரி மாவட்டம், உழவர்கரை தாலுக்கா, 35 - உழவர்கரை வருவாய் கிராமத்தில் நிலத்தினைக் கையகப்படுத்த கோரியுள்ளது.

3. ஆகவே, புதுச்சேரி அரசு, புதுச்சேரி மாவட்டம், 35 - உழவர்கரை வருவாய் கிராமத்தில் ''புதுச்சேரி, கதிர்காமம் தில்லையாடி வள்ளியம்மை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்'' என்ற பொது நோக்கத்திற்காக, கீழ்க்கண்ட நிலத்தினை அதன் உரிமையாளர்களிடமிருந்து நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டம், 2013-இன் படி கையகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

**35 - உழவர்கரை வருவாய் கிராமம்**

| வ. எண் | மறு அளவை எண் | கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் அளவு (ஹெக்டர்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | H. A. Ca. |
| 1. | 230/5 | 00 48 00 |

4. மேற்படி, கையகப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக புதுச்சேரி நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை விதிகள், 2016, விதி 9(1)-இன் படி புதுச்சேரி மாவட்டம், 35 - சாரம் வருவாய் கிராமத்தில் பாதிக்கப்படும் நிலம் உள்ள பகுதிகளில் சமுதாய தாக்கத்தின் கணிப்பு ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு மாநில சமுதாய தாக்கத்தின் கணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

5. இந்த சமுதாய தாக்கத்தின் கணிப்புக் குழு கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பணியாற்றும் துறை/நிறுவனம்/முகவரி | பொறுப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | முனைவர். கே. சிவக்குமார், தலைவர், சமூக பணித்துறை. | டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், காரைக்கால். | தலைவர் |
| 2. | முனைவர். ப. ரேவதி, இணை பேராசிரியர், குடிமுறை பொறியியல் துறை. | புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகம், புதுச்சேரி. | உறுப்பினர் |
| 3. | முனைவர். சுந்தர் ஆறுமுகம், உதவி பேராசிரியர், சமூக பணித்துறை. | டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், காரைக்கால். | உறுப்பினர் |
| 4. | திரு. K. காளமேகம், சூழலியல் பொறியாளர். | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, புதுச்சேரி. | உறுப்பினர் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5. | திருமதி ச.தேவகி, M.S.W.,<br>சமூக பணியாளர். | துணை இயக்குனர் (நோய் தடுப்பு) அலுவலகம்,<br>சுகாதாரத் துறை, காரைக்கால். | உறுப்பினர் |

6. மேற்படி, சமுதாய தாக்கத்தின் கணிப்புக் குழுவினர் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வர்:

| | | |
|---|---|---|
| 1. | ஆலோசனை | உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட உத்தேசித்துள்ள பகுதியின் ஆர்வலர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். |
| 2. | நில அளவை | இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியில் இருந்து 15 நாட்களுக்குள் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தினை உழவர்கரை வட்டாட்சியர், நில அளவை செய்திட வேண்டும். |
| 3. | பொது விசாரணைகள் | சமுதாய தாக்கத்தின் கணிப்புக் குழு, தனது அறிக்கையைச் சமர்பிக்கும் முன், பொது விசாரணைக்கான நேரத்தையும், இடத்தையும் சமுதாய தாக்கத்தின் கணிப்புக் குழு தீர்மானித்திட வேண்டும். |
| 4. | கால வரிசை | இந்த அறிவிக்கை வெளியான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இக்குழுவானது ஆய்வைத் தொடங்க வேண்டும். ஆய்வு தொடங்கிய தேதியிலிருந்து ஆறு (6) மாத காலத்திற்குள் சமுதாய தாக்கத்தின் கணிப்புக் குழு அறிக்கை மற்றும் சமுதாய தாக்கத்தின் மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றை தயார் செய்து, தொடர்புடைய அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகள் மற்றும் பாதிப்பிற்கு உள்ளாகும் பகுதிகளில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். |

7. புதுச்சேரி நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை விதிகள், 2016, விதி 7(4)-இன் படி சமுதாய தாக்கத்தின் கணிப்புக் குழுவானது ஆய்வினைத் தொடங்கிய நாளில் இருந்து ஆறு (6) மாத காலத்திற்குள் தனது அறிக்கையினைப் படிவம் III-ல் மற்றும் சமுதாய தாக்கத்தின் மேலாண்மைத் திட்டத்தினைப் படிவம் IV-லும் சமர்ப்பிக்க வேண்டும்.

8. சமுதாய தாக்கத்தின் கணிப்பு குழுவினைத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சிறப்பு செயலர் (வருவாய்) அலுவலகம்,
வழுதாவூர் ரோடு,
பேட்டையான் சத்திரம்,
புதுச்சேரி-605 009.

தொலைபேசி எண்:0413-2299509/2299511

(அல்லது)

சார்பு/துணை ஆட்சியர் (வடக்கு) மற்றும் நிலம் கையகப்படுத்தும் அலுவலர்,
வருவாய்த்துறை வளாகம்,
சாரம், புதுச்சேரி-605 013.
தொலைபேசி எண்:0413-2231100

*புதுச்சேரி, நாள்: 18, மார்ச் 2025.*

(துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி)

**குலோத்துங்கன். அ.,** இ.ஆ.ப.,
அரசு சிறப்பு செயலர் (வருவாய்) மற்றும்
தலைவர்-சமுதாய தாக்கத்தின் கணிப்பு அலகு.

GOVERNMENT OF PUDUCHERRY

**DEPARTMENT OF REVENUE AND DISASTER MANAGEMENT, PUDUCHERRY**

*No. 604/Rev./B1/2025.*

*Puducherry, dated 18th March 2025.*

NOTIFICATION

**Under sub-section (2) of section 4 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013**.

Whereas, certain land is required for the public purpose *viz.,* "Construction of additional class rooms for Thillaiyadi Valliammai Government High School, Kathirkamam, Puducherry" at Oulgaret Revenue Village of Oulgaret Taluk, Puducherry District;

2. And whereas, the requisition Department *viz.,* the Directorate of School Education, Puducherry has submitted a proposal for the acquisition of land at 35 - Oulgaret Revenue Village of Oulgaret Taluk, Puducherry for the said public purpose.

3. Now, therefore, the Government intends to acquire the following land from the land owners/ interested persons, located at No. 35- Oulgaret Revenue Village of Oulgaret Taluk for the public purpose *viz., "*Construction of additional class rooms for Thillaiyadi Valliammai Government High School, Kathirkamam, Puducherry" under the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013.

**35 - Oulgaret Revenue Village**

| Sl.No.<br>(1) | Re-survey No.<br>(2) | Extent of Land proposed for Acquisition (H.A.C.)<br>(3) |
|---|---|---|
| | | H. A. Ca. |
| 1. | 230/5 | 00 48 00 |

4. In the process of the said acquisition proceedings, under rule 9(1) of Puducherry Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Rules, 2016, the State Social Impact Assessment Team has been constituted to carry out the Social Impact Assessment Study in the affected areas of No. 35 - Oulgaret Revenue Village of Oulgaret Taluk, Puducherry District.

5. The following Members constitute the Social Impact Assessment Team:

| Sl. No.<br>(1) | Name and Designation<br>(2) | Department<br>(3) | Officiating as<br>(4) |
|---|---|---|---|
| 1. | Dr. K. Sivakumar,<br>Head, Department of Social Work. | Dr. Kalaignar M. Karunanidhi Government Institute of Postgraduate Studies and Research, Karaikal. | Team Leader |
| 2. | Dr. P. Revathi,<br>Associate Professor,<br>Department of Civil Engineering. | Puducherry Technological University, Pillaichavady, Puducherry. | Member |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3. | Dr. Sundar Arumugam, Assistant Professor in Social Work. | Dr. Kalaignar M. Karunanidhi Government Institute of Postgraduate Studies and Research, Karaikal. | Member |
| 4. | Thiru K. Kalamegam, Environmental Engineer. | Department of Science, Technology and Environment, Puducherry. | Member |
| 5. | Tmt. S. Devaguy, M.S.W., Social Worker. | Office of the Deputy Director (Immunization), Karaikal. | Member |

6. The Social Impact Assessment Team shall carry out the following activities:

| | | |
|---|---|---|
| 1. | Consultation | With stakeholders of the proposed area including Oulgaret Municipality, Puducherry. |
| 2. | Survey (Organization) | Tahsildar, Taluk Office, Oulgaret shall complete the survey of proposed area under acquisition within 15 days from the date of publication of this Notification. |
| 3. | Public Hearing(s) | Social Impact Assessment (SIA) Team will decide the time and place for public hearing before submitting Social Impact Assessment (SIA) report. |
| 4. | Time-line | The Social Impact Assessment (SIA) Team shall commence the study within thirty days from the issue of this Notification. The Social Impact Assessment (SIA) report and Social Impact Assessment Management Plan (SIMP) to be completed by the SIA Team within 6 (six) months from the date of commencement of study and to be published in the Official Website and on the notice-board of the concerned offices/authorities. |

7. The Social Impact Assessment Team shall submit its report in Form-III and SIMP in Form-IV, as per rule 7(4) of the Puducherry Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Rules, 2016, within a period of 6 (six) months from the date of its commencement.

8. The Contact information of the Social Impact Assessment Unit:

Office of the Special Secretary (Revenue),
Vazhuthavur Road,
Pettaiyanchathiram,
Puducherry.
Phone No. 0413-2299509/2299511

(or)

The Sub/Deputy Collector (Revenue) North-*cum*-Land Acquisition Officer,
Revenue Complex,
Saram, Puducherry-605 013.
Phone No. 0413-2231100

(By order of the Lieutenant-Governor)

**KULOTHUNGAN. A.,** I.A.S.,
Special Secretary to Government (Revenue).